# தூப்புக்காரி நாவலில் இடம்பெறும் தொழிலாளர்களின் நிலை

*பெ. சிவசக்தி*
பகுதிநேர முனைவர்பட்ட ஆய்வாளர்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை
உதவிப் பேராசிரியர், தமிழியல் துறை
ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரி(தன்னாட்சி), சிவகாசி

*முனைவர் வி. கலாவதி*
இராஜபாளையம் இராஜீக்கள் கல்லூரி, இராஜபாளையம்
https://doi.org/10.5281/zenodo.15323809

**முன்னுரை**

*உழைப்பே உயர்வு என்பதைத் தாரகமந்திரமாகக் கொண்டு இன்றைய காலகட்டத்தில் ஆணும், பெண்ணும் எவ்வித வேறுபாடுமின்றி உழைத்துக் கொண்டிருக்கின்றனர். உழைப்பின் பயன் பொருளாதார நிலையில் உயர்வு ஏற்படுகின்ற போது மகிழ்ச்சியைத் தருகிறது. இது ஒரு புறம் இருக்க கல்வி வாய்க்கப்பெறாத சூழலில் எவ்வளவு கடுமையாக உழைத்தாலும் அதற்கேற்ப பலன் கிட்டுவதில்லை. குறிப்பாக துப்புரவுத் தொழிலாளர்களின் வாழ்வானது அவலநிலையிலேயே இருக்கிறது என்பதை உறுதிசெய்வதாக மலர்வதி எழுதிய தூப்பக்காரி நாவல் அமைந்துள்ளது. துப்புரவுத்தொழிலாளர்களின் வாழ்வில் நிலையை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.*

**சாதியப்பாகுபாடு**

*தூப்புக்காரி நாவல் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள கல்லுவிளை தான் கதைக்களம். இந்நாவல் மகி என்ற தனியார் மருத்துவமனையின் கழிப்பறையை சுத்தம் செய்யும் துப்புரவாளர்களின் நிலையை வைத்து நகர்கிறது. இந்திய சமூகத்தைப் பொறுத்தவரை சாதிய சமூகமாக அமைந்துள்ளதால் அனைத்து இடங்களிலும் சாதீய வெளிப்பாடுத் தோன்றுகிறது. உயர்ந்த சாதியைச் சாந்தவர்களுக்கு கிடைக்கும் வாய்ப்பும், வசதியும் தாழ்ந்த சாதியைச் சார்ந்தவர்களுக்கு கிடைப்பதில் சிக்கல் எழுகிறது. அந்த வகையில் தூப்புக்காரி நாவலில் வரும் கனகம் கணவனின் மருத்துவச் செலவிற்காக வாங்கிய கடனை அடைக்க அதே மருத்துவமனையில் தூப்புக்காரியாக வேலை செய்கிறார். தான் படும்பாடு தன் மகள் படக்கூடாது என்பதற்காக எவ்வளவோ முயன்றும் கனகம் உடல்நிலை சரியில்லாமல் போன போது மகள் புவாசி நாற்றம் பிடித்த ஒட்டுமொத்தக் கழிவுகளையும் துப்புரவும் செய்யும் வேலைக்குத் தள்ளப்படுகிறாள் என்பது ஒட்டுமொத்த பெண்களின் வலியாக வெளிப்படுகிறது.*

**தொழில் - தொழிலாளி விளக்கம்**

*“அலுவல், செயல், பெருமை, தந்திரம், ஏவல், திறமை, களவு.”[1] என்று திருமகள் தமிழகராதி தொழில் என்பதற்கு விளக்கம் தருகிறது.*

*அபிதான சிந்தாமணி “ஆக்கல், காத்தல், அழித்தல், உழவுத்தொழில், வரைவு வாணிபம், சிற்பம்”[2] என்று தொழில் என்பதற்கு விளக்கம் தருகிறது.*

*தொழிலாளி என்பதற்கு “வேலைக்காரன் வேலைத்திறன் படைத்தவன்”[3] என்று அபிதான சிந்தாமணி குறிப்பிடுகிறது.*

*மனிதனின் அடிப்படைத்தேவைகளில் முதன்மை பெறுவது உணவு. அந்த உணவைப் பெறுவதற்காக எந்தத் தொழிலையும்*

*செய்வதற்கு மனிதர்கள் தயாராக இருக்கின்றனர். வாழ்க்கைப் போராட்டத்தை எதிர்க்கொள்ள உழைத்தால் போதும் உழைப்பிற்க்கேற்ற ஊதியம் கிடைத்தாலும் சரி, கிடைக்காவிட்டாலும் சரி முழுமனதோடு அந்த வேலையைச் செய்கின்றனர். தூப்புக்காரி நாவலில் வரும் கனகம், ரோஸ்லி சக்கிலிய வகுப்பைச் சார்ந்த மாரி போன்றோர் சகித்துக் கொள்ளும் செயல்கள் ஒட்டு மொத்த துப்புரவுத் தொழிலாளர்களையும் பிரதிபலிப்பதாக உள்ளது.*

**சகிப்புத்தன்மை**

*ஒவ்வொரு முறையும் கழிப்பறையைச் சுத்தம் செய்யும் போது காணும் காட்சியும் மலங்களின் நாற்றமும் அடிவயிற்றைப் பிரட்டிக் கொண்டு வரும் வாந்தியும் பழகிப்போனதற்குக் காரணம் வருமானம் பெறவேண்டும் என்ற ஒன்றே. மனிதன் தன் சொந்தக் கழிவைத் தான் அகற்றவோ அல்லது அசுத்தம் செய்யவோ அருவருப்புப்படும் போது மனிதர்களின் மலத்தை, பெண்களின் மாதவிடாய்த் துணிகளை கோப்பையிலிருந்து அகற்ற வாஞ்சையுடன் செயல்படும் துப்புரவுத் தொழிலாளர்களின் நிலையை யாரும் நினைத்துப்பார்க்கவில்லை. கனகம் மருத்துவ வளாகத்தைச் சுத்தம் செய்து வருகிறாள். அவள் சுத்தப்படுத்திய அடுத்த நிமிடமே மருத்துவமனைக்கு வந்தவள் எச்சில் துப்புகிறாள். இதைக் கேள்வி கேட்ட கனகத்தை எச்சில் துப்பிய பெண் சரமாரியாகத் திட்டுகிறாள்.*

> ***"ஏன் ஓசுலியா தூத்து வாருற? கைநிறைய சம்பளம் வாங்குற இல்ல....***
> ***துப்பவோ, தூறவோ, மோளவோ என்ன வேணுமங்கிலும் செய் அழுக்கு வார நாங்க இருக்கோமுண்ணு அழுக்காக்கியிட்டே இருங்க."***
> ***(தூ.ப.14)***

*என்று பதில் சொன்னாள் கனகம். அடிமட்ட ஏழை அதுவும் பெண்ணாக இவ்வுலகம் போட்டு மிதிக்கும் ரணங்கள் ஏராளம் என்பதை இவ்வரிகளின் வாயிலாக அறியலாம். வீட்டில் நம்மை சுற்றியிருக்கும் இடம் சுத்தமாக இருக்க வேண்டும் என்று கருதும் நாம் சுத்தமாக வைத்திருக்க வேண்டிய பொது இடத்தை அசுத்தப்படுத்துவதோடு அதைத் தட்டிக் கேட்பவர்களை ஒரு பொருட்டாகக் கூட மதிப்பதில்லை. நமக்கு நாற்றமெடுக்கும் கழிவுகள். முகத்தைச் சுண்ட வைக்கும் கழிவுகள் துப்புரவாளிகளுக்கு நறுமணத்தையா தரும் என்பதை யாரும் யோசிப்பதில்லை என்பதையே மலர்விழி பதிவுசெய்துள்ளார்.*

*இறைவனின் படைப்பில் அனைத்து உயிர்களும் சமம். ஆனால் செய்கின்ற வேலையே இங்கு பாகுபாட்டை ஏற்படுத்துகிறது. வேலை வேறாக இருந்தாலும் மனித மனம் என்பது ஒன்றாகத் தானே இருக்கும். உயர்ந்த சாதியத் தோற்றமும், பொருளாதார நிலையும் வசதி வாய்ப்பும் வளர்ச்சியும் அடிமைத் தொழில் அல்லது கீழ்மட்டமாகக் கருதக்கூடிய தொழிலை செய்பவர்களைக் கண்டால் வெறுப்பையே வெளிப்படுத்துகிறது. கனகத்தின் மகள் புவரசி கார் ஓட்டும் மனோவை விரும்புகிறாள். மனோவின் வீட்டுத் திருமணத்திற்குச் செல்லும் கனகம் அங்கு எச்சில் இலையை எடுக்கும் வேலையைச் செய்கிறாள். அந்த நேரத்தில் ஏற்பட்ட பசியின் கொடுமையால் கனகமும் ரோஸ்லியும் சாப்பிட அமர்கின்றனர். அந்த நேரத்தில் மனோவின் மாமா இருவரையும் சாப்பாட்டைவிட்டு எழுந்திருக்கும்படி கூற கனகமும், ரோஸ்லியும் அவமானத்தால் கூனிக்குறுகி நிற்கின்றனர் என்பதை,*

*"பந்தியில் பலரும் பார்க்கும்படி அவமானப்படுத்தியதால் கனகமும் ரோஸ்லியும் அவமானத்தால் சுருண்டார்கள். முன் வைத்த உணவை முழுதாக தின்னும் முன் எழுப்பிவிட்ட வலியோடு இருவரும் எழும்புகையில் பந்தியில் இருந்தவர்கள் இவர்களையே பார்த்தார்கள்"*

> ***"எச்சில் இலைகளைத் தட்டும் இடத்தில் கனகமும் ரோஸ்லியும் அழுதுகொண்டே அமர்ந்தார்கள். அவமானம் சுட்டுபொசுக்கியது. அவர்களின் கண்ணீரின் ரணத்தை இருளைத் தவிரவேறு எதுவும் உணரவில்லை." (தூ.ப.36)***

*என்ற வரிகள் வாயிலாக அறியலாம். பசி என்பது அனைவருக்கும் பொதுவானது. ஒரு சாண் வயிற்றை நிரப்பவே அனைவரும்*

*ஓடிக் கொண்டிருக்கிறோம். மனோவின் தந்தை மாதிரியான ஆட்கள் துப்புரவுத் தொழிலாளர்களை ஒரு உயிராகக் கூட மதிக்காமல் இருப்பதையே இந்நாவலில் ஆசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார்.*

**புவரசியின் காதல்**

*தூப்புக்காரியின மகள் தூப்புக்காரியாகத் தான் வாழவேண்டுமா என்று சமூகத்தினை நோக்கி கேள்வி கேட்பதாக புவரசி கதாபாத்திரம் அமைந்துள்ளது. புவரசி மனோவை விரும்புகிறாள். சாக்கடை அள்ளும் மாரி புவரசியை விரும்புகிறான். மனோவின் கோழைத்தனம் புவரசியோடு வாழ முடியாது போகிறது. ஆனால் சாக்கடையில் இறங்கி சுத்தம் செய்யும் மாரியின் தோற்றமும் அழுக்கும், நாற்றமும் நிறைந்ததாக இருக்கிறது. ஆனால் சேற்றில் முளைத்த செந்தாமரையாக மாரித் திகழ்வதை மலர்வதி ஆங்காங்கே பட்பிடித்துக் காட்டியுள்ளாள். கனகம் உடல்நிலை சரியில்லாமல் இருந்த போது இரவு வீட்டிற்குச் சென்ற மகள் புவரசி வரத் தாமதமானதால் மாரியைச் சென்று பார்த்து வரும்படி கனகம் கூறுகிறாள். மாரி புவரசியும் மனோவும் வீட்டில் இருந்த கோலத்தைக் கண்டபோதும் அதை அவன் பெரிதாக வெளிகாட்டவில்லை. புவரசியின் தடுமாற்றத்தைக் கண்டபோதும் புவரசியின் மீது கொண்ட காதல் மாரிக்க மாறவில்லை என்பதை,*

> ***ஆண் செய்யும் தவறை பெண் செய்தால் துரத்தி துரத்தி அடிக்கும் சமூகததின் கூறுகளில் வாழும் மாரிக்கும் வெகு எளிதில் புவரசியின் செயலை ஏற்றுக் கொள்ள முடியாமல் தவித்தான். பெண்ணுக்கான வாழ்வை அவள் தானே தேர்ந்தெடுக்கின்ற உரிமையை இப்போது வரைக்கும் கொடுக்காத உலகில் வாழ்வதாலோ என்னவோ மாரிக்கும் புவரசியின் செயல் சரி என ஏற்றிருக்க முடியாலே வலி கொண்டான் ஆனாலும் அவள் மீது வைத்த காதலால் அவளைத் துளிகூட வெறுக்கவே முடியவில்லை. (தூ.ப.67)***

*என்ற வரிகள் மூலம் பெண்ணுக்கென்று இந்த சமூகம் விதித்த சட்டங்களை வரம்புகளை முற்போக்கு எண்ணம் கொண்டவராலும் ஏற்றுக்கொள்ள முடியாமல் இருப்பதை உணர்த்துகிறது என்றாலும் மாரியின் நேசம் புவரசியின் மீது சிறிதும் மாறாமல் உள்ளதைக் காட்டுகிறது.*

**எதார்த்த வாழ்க்கை**

*ஒவ்வொரு மனிதனுக்கும் வாழ்க்கையைப் பற்றிய எதிர்பார்ப்பு ஒன்றாகவும் நிதர்சனமான வாழ்க்கை ஒன்றாகவும் இருக்கும். காலமும் சூழ்நிலையுமே மனிதனை எதார்த்த வாழ்க்கையை நோக்கிப் பயணிக்க வைக்கிறது. புவரசி துப்புரவு செய்யும் வேலையை தான் செய்யவேக் கூடாது என்று இருந்தாள். தாயின் உடல்நிலையும் வாழ்க்கையை ஓட்டத் தேவையான பொருளாதாரத் தேடலும் சேர்ந்து தூப்புக்காரி மகள் தூப்புக்காரியாக வலம் வரும் அவலத்தை எண்ணி வருந்துகிறாள். அந்த நேரத்தில் கனகம்,*

*“எல்லாத் ஒரு காலத்துக்குத்தான். அதுக்கப்புறம் வாழ்க்கையோட வலிதான் பெருசா தெரியும். ஒடம்புண்ணா என்ன நினைச்சமோளே ஆகக் கூடி கொஞ்சம் சொப்பனங்களை சுமக்கின்ற சொப்பனக் கூடுதான் தேகம்” என சொல்லும் வார்த்தை எக்காலத்துக்கும் பொருந்தக்கூடியதாக உள்ளது.*

*நாடார் இனத்தைச் சார்ந்த புவரசி தன் ஜாதிக்காரனான பணக்கார வீட்டுப் பையன் மனோவைக் காதலிக்கிறாள். வயது தன்னை மீறி புவரசி மனோவிடம் கற்பைப் பறி கொடுக்'கிறாள். மனோ தந்தையிடம் தூப்புக்காரியான புவரசியை விரும்புவதைக் கூற தைரியமில்லாதவனாக இருக்கிறாள். வீட்டில் பார்த்து வைத்த வேறொரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு வெளிநாட்டிற்குச் சென்றுவிடுகிறான். ஒரே சாதியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் பணக்கார அந்தஸ்தும், எதிர்த்துப்பேசும் திறமையும், காதலில் உறுதியும் இல்லாததால் மனோ புவரசியை விட்டுப்பிரிகிறான்.*

*புவரசியை சக்கிலியனான மாரி குழந்தையோடு ஏற்றுக்கொள்கிறான். புவரசி*

மனோவை விரும்பி தன்னை பறிகொடுத்த போதும் அழுக்கான தோற்றம் பிடித்த ஊர்க் கழிவுகளை அள்ளும் மாரி உள்ளத்தில் அழுக்கின்றி அவனை ஏற்றுக்கொள்கிறான்.

பட்ட காலே படும், கெட்ட குடியே கெடும் என்பதற்கு ஏற்றாற்போல புவரசியின் வாழ்வும் நகர்கிறது. மனோவை புவரசி விரும்பியதை அறிந்த கனகம் உயிர்பிரிகிறது. கருவுற்று இருக்கும் தன்னை ஏற்றுக் கொண்ட மாரியும் இறந்துவிடுகிறான். வாழ்க்கைக்கான தேடலில் புவரசி தூப்புக்காரியாகவே தன்னை மாற்றிக் கொள்கிறாள். என்னதான் ஒரு பெண் தனக்குப் பிடித்தமான வாழ்வை வாழ விரும்பினாலும் குடும்பச்சூழலும், சமூகமும் அவளை வாழ விடுவதில்லை.

ஒரு பெண் தன் வாழ்வில் அடைய விரும்பும் பெரிய பேறு தாய்மை. வறுமையின் காரணமாக் வாடும் புவரசியிடம் மருத்துவர் குழந்தையை மருத்துவமனைக்கு வரும் ஒருவருக்குத் தத்துக் கொடுக்கச் சொல்கிறார். அதை முதலில் ஏற்றுக் கொள்ளும் புவரசி பின் மனம்மாறி குழந்தையைத் தர மறுத்துவிடுகிறாள். பொருளாதார நிலையில் பின்தங்கியிருப்பவர்களுக்கு மிகவும் குறைவான ஊதியத்தைக் கொடுத்து தலைமுறை தலைமுறையாக அடிமை நிலையில் வைத்திருக்க கருதும் பணக்கார முதலாளிகளின் பிரதிபலிப்பாக மருத்துவர் கதாபாத்திரம் அமைந்துள்ளது. பணக்காரவர்க்கம் தாயையும் தள்ளிவிடுகிற அவலத்தைக் காணமுடிகிறது.

### முன்னேற்றத்தை விரும்பும் மாரி

"சாதிகள் இல்லையடிப் பாப்பா"[4] என்கிறார் பாரதி. ஆனால் நம் சமூகத்தில் சாதியும், சாதியைச் சார்ந்த தொழிலும், சாதியைக் காரணம் காட்டி நடக்கும் அடாவடித்தனங்களும் நிறையவே மண்டிக்கிடக்கின்றன. மனிதனுக்கு மதிப்பும் மரியாதையும் அவன் செய்யும் தொழிலும், சம்பாதிக்கும் பணமுமே கிடைக்கச் செய்கிறது. மாரி சாக்கடையை அள்ளும் தொழிலை விட்டு வேற தொழிலுக்குப் போகக்கூடாதா? இதை சுத்தம் செய்ய ஏதேனும் மிசினைக் கண்டுபிடிக்கக் கூடாதான்னு கேட்கிறான். மேலும் புதிய மாற்றத்தை விரும்புவதை, "ஏன் நம்ம சாதி படிச்சப்பிடாதா? நம்ம சனங்க பெரிய உத்தியோகம் பாக்கபிடாதா? நாம வேற சோலி செய்யப்பிடாதா? இந்த சாக்கடையை விட்டு விலகி அழுக்காக்கி விடுறவய்களே நம்மனை கொன்னா போடுவானுவ. நம்மளும் மதிப்பும், மரியாதையுமா வாழ ஆசைப்படணும் ஏய். என்னத்த எல்லாமோ கண்டு பிடிக்கிறாங்களே இந்த நாட்டுல, ஏன் சாக்கடையை கழுவ ஒரு மிசியனைக் கண்டுபிடிக்கக்கட்டும்." (தூ.ப.47) என்று வேதனையோடுக் கூறுகிறான். மாற்றம் ஒன்றே மாறாதது மாற்றம் தோன்ற ஒரு நொடி போதும். அந்த மாற்றத்தை மாரி விரும்புவது தனக்கு மட்டும் கிடையாது. தன் ஒட்டு மொத்த சமுதாயத்திற்கான எதிர்ப்பார்ப்பாக உள்ளது.

> **"சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்**
> **நீதி வழுவா நெறிமுறையின் - மேதினியில்**
> **இட்டார் பெரியோர் இடாதோர் இழிகுலத்தோர்**
> **பட்டாங்கில் உள்ளபடி"[5]**

என்று ஔவையார் பாடியிருப்பது இங்கு நோக்கத் தக்கது.

இவ்வுலகில் சாதிகள் என்ற சாயம் மனிதன் புசிக் கொண்டது அந்தச் சாயம் சார்ந்த அழுக்குகள் மறைய வேண்டும் அழுக்கை சுத்தப்படுத்தும் வேலையை செய்ய மறுத்துவிட்டால் இவ்வுலகமே நாறிவிடும். நம்முடைய அழுக்கை நாமே சுத்தம் செய்ய மறுக்கின்றபோது. சுத்தம் செய்பவர்குளை மனிதர்களாகவே மதிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். விளிம்பு நிலை மாந்தர்களின் அவலத்தைப் புரிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கிலே ஆசிரியர் இந்நாவலைப் படைத்துள்ளார்.

### முடிவுரை

இவ்வாய்வின் வழி தொழில், தொழிலாளி என்பதற்கான விளக்கங்களை அறிந்து கொள்ளமுடிகிறது.

*செய்யும் தொழிலே தெய்வம் எனக் கருதி உழைப்பிற்கேற்ற ஊதியம் கிடைக்காவிட்டாலும் அதை ஏற்றுக் கொண்டு வாழும் நிலையை அறிந்து கொள்ள முடிகிறது.*

*எத்தனை நாற்றத்தோடு வாழ்ந்தாலும் அவர்களின் உணவிற்கான போராட்டம் ஓயவில்லை. சமூகத்தில் துப்புரவுத் தொழிலாளர்களின் வேலை செய்கின்ற இடத்தில் சக மனிதர்களோடு உணவு உண்ணக் கூட முடியாமல் கூனிக் குறுகி இருப்பதை கனகம், ரோஸ்லி கதாபாத்திரம் சுட்டிச் செல்கிறது.*

*குடும்பச்சூழலும், தாயின் உடலும், வருமானமும் புவரசியின் காதலைத் தடுக்கிறது. மாரியின் தோற்றம் அழுக்காக இருந்தாலும் உள்ளம் வெள்ளாவியில் வெளுக்கப்பட்டதாக உள்ளது. புவரசி கர்ப்பமுற்று இருந்தாலும் அவளை ஏற்றுக் கொள்ளும் மாரியின் இறப்பு புவரசி குலத் தொழிலை நோக்கிப் படையெடுக்கக் காரணமாகிறது.*

*மொத்தத்தில் எத்தனை மாற்றம் இருந்தாலும் துப்புரவாளர்கள் வாழ்வானது அடிப்படைத் தேவைகளைக் கூட நிறைவு செய்ய இயலாத அவலநிலையை நோக்கியே செல்கிறது என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.*

**அடிக்குறிப்பு**

1. *திருமகள் தமிழகராதி, ப.787*
2. *அபிதான சிந்தாமணி, ப.902*
3. *அபிதான சிந்தாமணி, ப.903*
4. *பாரதியார், பா.எண்.2*
5. *ஔவையார், நல்வழி, பா.2*